**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்**
**முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்**
**2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ஆம் நாள் திங்கள்கிழமை**
**இ.ம.எண்.02/2019**
**அ.வ.எண்.288/2013**

1. கந்தசாமி
2. கொளந்த கவுண்டர்
3. குப்பன் சேவி
4. சின்னக்காள்
5. சிவகுமார்
6. மாரிமுத்து
7. அம்மணியம்மாள்
8. மாராக்காள்
9. ரவி
10. தாசன்
11. மாரியம்மாள்
12. மாராக்காள்
13. மாதையன்
14. அம்மாசி
15. ஈஸ்வரி
16. பெருமாள்
17. பெருமாயி
18. மாதையன்
19. வெங்கடாசலம்
20. நாகம்மாள் ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. மாதையன்
2. மாரியப்பன்
3. பாவாயி
4. பாப்பாத்தி
5. சின்னபொண்ணு ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

6. மாவட்ட ஆட்சியர், சேலம்
7. சார் ஆட்சியர், மேட்டூர்
8. வட்டாட்சியர், மேட்டூர் ...எதிர்மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள்

இம்மனு கடந்த 25.07.2019 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.பீட்டர் ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 வரையுள்ள எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 வரையுள்ள பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எல்.கணபதி சுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 8 வரையுள்ள எதிர்மனுதாரர்கள்/6 முதல் 8 வரையுள்ள உத்தேச தரப்பினர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.பி.சித்தன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(II) மற்றும் பிரிவு 151 ன் கீழ் மேற்படி வழக்கில் உத்தேச தரப்பினர்களை வழக்கில் 6 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்க்க கோரி மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>1) 19 ம் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு மற்ற மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : -

19 ம் மனுதாரரின் தாத்தா கந்தகவுண்டர் கடந்த 21.3.1938 ம் தேதியில் 19 ம் மனுதாரரின் பாட்டியான பழனியம்மாள் பெயருக்கு கிரயம் செய்தார். மேற்படி கிரய சொத்து கோல்நாயக்கன்பட்டி கிராமம், ச.எண்.65/10 புஞ்சை 0.92 செண்ட் நிலம் தீ.1.70 பைசா ஆகும். 1935 ம் ஆண்டிலிருந்து பட்டா 19 ம் மனுதாரரின் பாட்டியான பழனியம்மாள் பெயரிலேயே வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பக்கத்து நிலத்துக்காரரான பழனியப்பகவுண்டர் மகன் 1 ம் பிரதிவாதியான மாதையன் என்பவர் மனுதாரர்களுக்கு தெரியாமலேயே மேற்சொன்ன ச.எண்.65/10 விஸ்தீரணம் 0.92 செண்ட் நிலத்தை தனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்துள்ளார். அது தற்போதுதான் மனுதாரர்களுக்கு தெரிய வந்தது. அவ்வாறு செய்ததை ரத்து செய்ய வேண்டி சார்ஆட்சியர் அவர்களிடம் கடந்த 8.1.2018 ம் நாளன்று மனுதாரர்கள் மனு செய்துள்ளார்கள். மேற்படி எதிர்மனுதாரர்கள் ஒன்றாக சேர்ந்து கொண்டு மனுதாரர்களுடைய சுவாதீனத்தை அத்துமீறி உள்ளே நுழைய முயற்சி செய்து வருகிறார்கள். ஆகவே மேற்படி வழக்கில் உத்தேச தரப்பினர்களாக உள்ள மாவட்ட ஆட்சியர், சேலம், மற்றும் சார் ஆட்சியர், மேட்டுர், மற்றும் வட்டாட்சியர், மேட்டுர் ஆகியோர்களை மேற்படி வழக்கில் 6 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்க்க கோரி மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1 ம்எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 5 ம்எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனுதாரரின் மனு பொய். சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. 1 ம்எதிர்மனுதாரர் பெயரில் தாவா சொத்தான ச.எண்.65/10 ல் 0.92 செண்டுக்கு 20.10.1973 ல் பட்டா கொடுக்கப்பட்டு 1 ம்எதிர்மனுதாரரின் அனுபவத்தில் இருந்து வருகிறது. மேலும் 1 ம்எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு எதிராக அ.வ.எண்.183/2013 ல் தாவா தாக்கல் செய்து 31.1.2014 ல் தீர்ப்பும் பெற்றுள்ளார். இவைகள் அனைத்தையும் மறைத்து மனுதாரர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி

தவறு. மேலும் 1973ல் உள்ள பட்டா குறித்து தற்போது தெரியும் என்று கூறியுள்ளது கற்பனையான ஒன்று. 08.1.2018ல் மனுதாரர்கள் சார் ஆட்சியரிடம் மனுதாக்கல் செய்துள்ளது பற்றி எதிர்மனுதாரர்களுக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்ததிலிருந்து 6 வருடங்கள் கழித்து 1973 பட்டாவை ரத்து செய்ய உத்தேச தரப்பினர்களை சேர்க்க வேண்டி உள்ளதாக சொல்லியுள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. சுமார் 45 வருடங்களாக 1 ம்எதிர்மனுதாரர் உரிய ஆவணங்களுடன் சுவாதீனத்தில் இருந்து வரும் நிலையில் ஒரு தவறான தாவாவை தாக்கல் செய்து அதில் விசாரணை ஏதும் செய்யாமல் 6 வருடங்கள் காலங்கடத்தி விசாரணை சமயத்தில் சி.பு.கோ. கட்டளை 1 விதி 10(2)படி உத்தேச தரப்பினர்களாக தமிழ்நாடு அரசு அதிகாரிகளை சேர்க்க மனுதாரர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. எதற்காக சேர்க்க வேண்டும் என்ற காரணமும் கூறப்படவில்லை. எனவே மனுவினை தள்ளுபடி செய்ய செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>4) பிரச்சினை :</u>-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 19ம் மனுதாரரின் தாத்தா கந்தகவுண்டர் கடந்த 21.3.1938ம் தேதியில் 19ம் மனுதாரரின் பாட்டியான பழனியம்மாள் பெயருக்கு கிரயம் செய்தார் எனவும், மேற்படி கிரய சொத்து கோல்நாயக்கன்பட்டி கிராமம், ச.எண்.65/10 புஞ்சை 0.92 செண்ட் நிலம் தீ.1.70 பைசா எனவும், 1935ம் ஆண்டிலிருந்து பட்டா 19ம் மனுதாரரின் பாட்டியான பழனியம்மாள் பெயரிலேயே வழங்கப்பட்டுள்ளது எனவும், இந்நிலையில் பக்கத்து நிலத்துக்காரரான பழனியப்பகவுண்டர் மகன் 1ம் பிரதிவாதியான மாதையன் என்பவர் மனுதாரர்களுக்கு தெரியாமலேயே மேற்சொன்ன ச.எண்.65/10 விஸ்தீரணம் 0.92 செண்ட் நிலத்தை தனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்துள்ளார்கள் எனவும், அது தற்போதுதான் மனுதாரர்களுக்கு தெரிய வந்தது எனவும், அவ்வாறு செய்ததை ரத்து செய்ய வேண்டி சார்ஆட்சியர் அவர்களிடம் கடந்த 8.1.2018ம் நாளன்று மனுதாரர்கள் மனு செய்துள்ளார்கள் எனவும், மேற்படி எதிர்மனுதாரர்கள் ஒன்றாக

சேர்ந்து கொண்டு மனுதாரர்களுடைய சுவாதீனத்தை அத்துமீறி உள்ளே நுழைய முயற்சி செய்து வருகிறார்கள் எனவும், ஆகவே மேற்படி வழக்கில் உத்தேச தரப்பினர்களாக உள்ள மாவட்ட ஆட்சியர், சேலம், மற்றும் சார் ஆட்சியர், மேட்டுர், மற்றும் வட்டாட்சியர், மேட்டுர் ஆகியோர்களை மேற்படி வழக்கில் 6 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்க்க கோரி மனுதாரர்கள் மனு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் 1 ம்எதிர்மனுதாரர் பெயரில் தாவா சொத்தான ச.எண்.65/10 ல் 0.92 செண்டுக்கு 20.10.1973 ல் பட்டா கொடுக்கப்பட்டு 1 ம்எதிர்மனுதாரரின் அனுபவத்தில் இருந்து வருகிறது எனவும், மேலும் 1 ம்எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு எதிராக அ.வ.எண்.183/2013 ல் தாவா தாக்கல் செய்து 31.1.2014 ல் தீர்ப்பும் பெற்றுள்ளார் எனவும், இவைகள் அனைத்தையும் மறைத்து மனுதாரர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி தவறு எனவும், மேலும் 1973 ல் உள்ள பட்டா குறித்து தற்போது தெரியும் என்று கூறியுள்ளது கற்பனையான ஒன்று எனவும், 08.1.2018 ல் மனுதாரர்கள் சார் ஆட்சியரிடம் மனுதாக்கல் செய்துள்ளது பற்றி எதிர்மனுதாரர்களுக்கு தெரியாது எனவும், வழக்கு தாக்கல் செய்து 6 வருடங்கள் கழித்து 1973 பட்டாவை ரத்து செய்ய உத்தேச தரப்பினர்களை சேர்க்க வேண்டி உள்ளதாக சொல்லியுள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல எனவும், சுமார் 45 வருடங்களாக 1 ம்எதிர்மனுதாரர் உரிய ஆவணங்களுடன் சுவாதீனத்தில் இருந்து வரும் நிலையில் ஒரு தவறான தாவாவை தாக்கல் செய்து அதில் விசாரணை ஏதும் செய்யாமல் 6 வருடங்கள் காலங்கடத்தி விசாரணை சமயத்தில் சி.பு.கோ. கட்டளை 1 விதி 10(2)படி உத்தேச தரப்பினர்களாக தமிழ்நாடு அரசு அதிகாரிகளை சேர்க்க மனுதாரர்களுக்கு எந்த உரிமையும் இல்லை எனவும், உத்தேச தரப்பினர்களை எதற்காக சேர்க்க வேண்டும் என்ற காரணமும் கூறப்படவில்லை எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் இவ்வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் வழக்கு சொத்துகள் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது எனவும், வாதிகளின் அனுபவத்தில் பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என பரிகாரங்கள் கோரியுள்ளது தெரிய வருகிறது. இச்சூழ்நிலையில் தான் மனுதாரர்கள் தரப்பில் தவறான தகவல்களின் அடிப்படையில் வழக்கு சொத்திற்கான பட்டா 1 ம்பிரதிவாதி பெயருக்கு மாற்றப்பட்டது எனவும், அதற்காக வருவாய் அலுவலர்களான 1 முதல் 3 உத்தேச தரப்பினர்கள்/6 முதல் 8 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் சேர்க்க கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி மனுவிற்கு ஆட்சேபணை ஏதும்

இல்லை என உத்தேச தரப்பினர்கள் தரப்பில் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1 ம்பிரதிவாதி பெயரில் 1973 ம் வருடத்திலேயே பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என கட்சி செய்துள்ளது தெரியவருகிறது. எனவே 1 ம்பிரதிவாதி பெயரிலான பட்டா தவறான தகவல்களின் அடிப்படையில் மாற்றப்பட்டதா இல்லையா என்பது குறித்து உத்தேச தரப்பினர்கள் இவ்வழக்கில் இருந்தால்தான் தீர்மானிக்க முடியும். எனவே உத்தேச தரப்பினர்கள் தேவையான தரப்பினர்கள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்துகளை பொறுத்து 1 ம்பிரதிவாதி பெயரில் எப்போது மாற்றப்பட்டது என்பது மனுதாரர்களுக்கு எப்போது தெரிய வந்தது என மனுவில் கூறவில்லை. இந்நிலையில் பட்டாவை ரத்து செய்ய 08.01.2018 ல் மனு அளித்துவிட்டு ஒருவருடம் கழித்து இம்மனுவினை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள். மேலும் இவ்வழக்கு விசாரணைக்காக பட்டியலிட்ட போது தான் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது. எனவே மனுதாரர்களால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலவிரயத்தை ஈடு செய்யும் வகையில் மனுதாரர்கள் செலவுத்தொகை அளிக்கும் பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர்கள் 1 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1000/- செலவுத்தொகையாக 19.08.2019 க்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 20.08.2019.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/-**திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u> இல்லை

ஒப்பம்/-**திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**